பெண்களுக்கான 'தோழி' விடுதிகள் – பழங்குடியினர் பள்ளி மாணவர்கள்

முன்னணி உயர்கல்வி நிறுவனங்களுக்கு அதிகளவில் தேர்வு!

'திராவிட மாடல்' அரசின் சாதனைகளுக்கு உலக வங்கி பாராட்டு!

நெஞ்சை நெகிழச் செய்த செய்திகளைப் பகிர்ந்து –

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

சென்னை, அக்.9-

பெண்கள் வேலைவாய்ப்பிற்காக உருவாக்கப்பட்ட 'தோழி விடுதிகள்' - தமிழ்நாடு அரசின் பழங்குடியினர் நலத்துறையால் நடத்தப்படும் பள்ளிகளில் பயின்ற மாணவர்கள் அதிகளவில் நாட்டின் முன்னணி உயர்கல்வி நிறுவனங்களுக்கு தேர்வு என 'திராவிட மாடல்' அரசின் சாதனைகளுக்கு உலகவங்கி பாராட்டு தெரிவித்துள்ளது என் நெஞ்சை நெகிழ வைத்துள்ளது என அச்செய்திகளையும் பகிர்ந்து, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து, நேற்று முன்தினம் (07-10-2026), கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது சமூக வலை தளத்தில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:-

நமது 'திராவிட மாடல்' அரசின் சாதனைகள் பற்றி, நேற்று என் நெஞ்சை நெகிழ வைத்த இரு செய்திகளை உங்களோடு பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்.



முதலாவது

தமிழ்நாடு முழுவதும் கழக ஆட்சியில் தொடங்கப்பட்ட தோழி விடுதிகள் பற்றி, More Than a Roof: How Safe Housing is Unlocking Women's Path to Education and Jobs in Tamil Nadu என்ற தலைப்பில் உலக வங்கி வெளியிட்டுள்ள பாராட்டுக் கட்டுரை.

அதில், "பெண்கள் அதிகம் பணிக்குச் செல்வதை ஊக்குவிப்பதுதான் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியைப் பெருக்கும் ஆற்றல்மிக்க வழி. அதற்கு முக்கியத் தடையாக இருப்பது, வாய்ப்புகளைத் தேடி மாநகரங்களுக்கு வரும் பெண்களுக்குப் பாதுகாப்பான தங்குமிடங்கள் இல்லாததே. அது தீர்க்கக் கூடிய பிரச்சினைதான் என திராவிட மாடல் அரசின் தோழி விடுதிகள் சாதித்துக் காட்டியுள்ளன. இதனை எல்லா மாநிலங்களும் உலக நாடுகளும் விரைவாகப் பின்பற்ற வேண்டும்" எனக் கூறப்பட்டுள்ளது.

"Thozhi's proposition is not complicated: when a young woman has somewhere safe to sleep, she can get on with pursuing a profession, getting a job, earning a living, and becoming who she was meant to be."
- World Bank

இரண்டாவது

தமிழ்நாடு அரசின் பழங்குடியினர் நலத்துறையால் நடத்தப்படும் பள்ளிகளில் பயின்ற மாணவர்களில் ஐந்தில் ஒருவர், அதாவது 20% பேர், நாட்டின் முன்னணி உயர்கல்வி நிறுவனங்களில் சேர்க்கை பெற்றுள்ளனர் என்பது.

இது சாதாரணச் சாதனை அல்ல. 2024-25 கல்வியாண்டைவிட, 2025-26 கல்வியாண்டில் 70% பழங்குடியின மாணவர்கள் அதிகமாக NIFT, NIT, National Law University, CIPET உள்ளிட்ட முதன்மையான உயர்கல்வி நிறுவனங்களுக்குத் தேர்வாகியுள்ளனர்.


மேலும், இப்பள்ளிகளில் 2022-இல் 86% இருந்த தேர்ச்சி விழுக்காடு தற்போது 97.33 விழுக்காடாக உயர்ந்துள்ளது. அதுமட்டுமின்றி, தேர்ச்சி பெற்றவர்களில் 95% மாணவர்கள் உயர்கல்விப் படிப்புகளில் சேர்ந்துள்ளனர்.

அரசியல் வேறுபாடுகளுக்கு எல்லாம் அப்பாற்பட்டு, பெண்களின் வேலைவாய்ப்பு மற்றும் பழங்குடி யினர் மாணவர்களின் கல்வியில் திராவிட மாடல் அரசு செய்துள்ள இந்த மகத்தான புரட்சியைச் சிறிதளவும் சிதைக்காமல் தற்போதைய அரசும் வளர்த்தெடுக்க வேண்டும்!

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது பதிவில் தெரிவித்துள்ளார்.









மாவட்டச் செயலாளர் பி.கே. சேகர்பாபு எம்.எல்.ஏ. முன்னிலை! சுதா தீனதயாளன் தலைமை!

சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. மகளிர் அணி – மகளிர் தொண்டரணி சார்பில் முப்பெரும் விழா!

79 கழக மூத்த மகளிருக்கு பொற்கிழி - 900 மகளிருக்கு நலத்திட்ட உதவிகள்!

கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி., – கழக அயலக அணிச் செயலாளர் எம்.எம். அப்துல்லா வழங்கி சிறப்புரை!

சென்னை, அக்.9-

சென்னை கிழக்கு மாவட்டம், துறைமுகம் மேற்கு பகுதியில், சென்னை கிழக்கு மாவட்ட திமுக மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டரணி சார்பில் 79 கழக மூத்த மகளிருக்கு பொற்கிழியும், 900 மகளிருக்கு நலத்திட்ட உதவிகளும் முப்பெரும் விழா, சென்னை பாரிமுனை ராஜா அண்ணாமலை மன்றத்தில் 07.10.2026 புதன்கிழமை மாலை 6 மணியளவில் நடைபெற்றது.

மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் சுதா தீனதயாளன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் பி.கே. சேகர்பாபு எம்.எல்.ஏ., பகுதிக் கழகச் செயலாளர்கள் எஸ். முரளி, எஸ். ராஜசேகர், எம். விஜயகுமார், ஜி.எம். தேவன், பி. ஸ்ரீராமுலு, இசட். ஆசாத், என்.பி.எம். ஷேக் அப்துல்லா, ராஜேஷ் ஜெயின், புனிதவதி எத்திராஜன், டாக்டர் ஏ.பி. பூர்ணிமா, சரிதா மகேஷ் குமார், சாவித்திரி வீரராகவன், டாக்டர் ஜி. சாந்தகுமாரி, எம். இப்ராஹிம் கனி, இரா. கலைச்செல்வி, பா. ஜெகதீஷ், நா. ரஞ்சித் விஜயாலயன், பி. விஜயகுமார், எல். சம்பத்குமார், எம். விநாயகம், வெ. பரிமளம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மே. ஜனார்த்தனன், கே.ஆர். அபரஞ்சி, மா. முத்துக்குமார், ந. சுந்தரம், எஸ். சந்தியாகு, வி. சந்தானலட்சுமி, சி.ப. ஜெயராமன், டி. சதீஷ்குமார், வே.பா. பிரபாகரன், ஆ.நா. பார்த்திபன், கே. கவியரசு, எல். சத்யநாராயணன், எஸ். புகழேந்தி, ஆர்.ஏ. அஸ்லாம், டி. கதிரவன் (எ) ராஜா, எம். பரத்குமார், மா. ஜெய்சங்கர், பா. கதிரவன், ஆர். ரவிச்சந்திரன், ஜி. ராம்மூர்த்தி, பா. அண்ணாதுரை, லண்டன் முருகன் ஆகியோர் வரவேற்றனர்.

இம்முப்பெரும் விழாவில் கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி., கழக அயலக அணிச் செயலாளர் எம்.எம். அப்துல்லா ஆகியோர் 79 கழக மூத்த மகளிருக்கு பொற்கிழியும், 900 மகளிருக்கு நலத்திட்ட உதவிகளும் வழங்கி சிறப்புரையாற்றினர்.

மேலும் இவ்விழாவில் மேயர் பிரியா ராஜன், டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி., ப. தாயகம் கவி, கே.எஸ். ரவிச்சந்திரன், தமிழன் பிரசன்னா, பி.கே. மூர்த்தி, கே. சந்துரு, சி. மகேஷ்குமார், ஷேக் அப்துல்லா, மாவட்ட நிர்வாகி புனிதவதி எத்திராஜன், பகுதிக் கழகச் செயலாளர்கள் கூ.பீ. ஜெயின், வே. வாசு, ஐ.சி.எப். வ. முரளிதரன், சாவித்திரி வீரராகவன், அ. நிர்மலா தேவி, மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் எல்.பி.எஃப். மோகன், கு. கிருஷ்ணமூர்த்தி மற்றும் கழக நிர்வாகிகள், செயல்வீரர்கள், முன்னோடிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் ராஜேஸ்வரி ஸ்ரீதர் நன்றி கூறினார்.







பி.கே. சேகர்பாபு பேச்சு

இவ்விழாவில் சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் பி.கே. சேகர்பாபு எம்.எல்.ஏ. பேசியதாவது:

"அடிபட்ட இடத்திலிருந்து ரத்தம் வருவதற்கு முன்னால், கண்களிலிருந்து வருவது கண்ணீராகும். அந்தக் கண்ணீரைத் துடைக்கின்ற கரங்களுக்குச் சொந்தக்காரர் எங்கள் உயிரினும் மேலான அன்புத் தலைவர்!

இன்றைக்கு இந்த ஆட்சி வந்த பிறகு, 'சிங்கப்பெண்' என்று ஒருவருக்குப் பட்டம் சூட்டி, இல்லாத ஒன்றை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

உண்மையான சிங்கப்பெண்கள் எங்கே இருக்கிறார்கள் தெரியுமா?

கழக மகளிர்த்தான்
சிங்கப்பெண்கள்!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் 78 ஆண்டு கால வரலாற்றில், விதையாக, வேராக, ஆலமரமாக, இந்த இயக்கத்தின் தூண்களாக, சிறை கண்ட சிங்கங்களாக இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த மகளிர்தான் உண்மையான சிங்கப்பெண்கள் என்பதை இந்த நேரத்தில் பதிவு செய்கிறேன்.

இயக்கத்திற்கு மாத்திரமல்ல; எங்கு ஒரு பெண்ணுக்கு எதிராகக் குரல் எழுந்தாலும், எங்கு ஒரு பெண்ணுக்கு அநீதி இழைக்கப்பட்டாலும், அது சொந்தக் கட்சிக்காரராக இருந்தாலும் சரி, ஓங்கிக் குரல் கொடுக்கின்ற பெண் பேராளுமை யார்?

அநீதிக்கு எதிராக
குரல் கொடுக்கும் கனிமொழி!

யார் என்று நான் சொல்ல வருகிறேன் என்பது தெரியாமலேயே கைதட்டுகிறீர்கள்! பாருங்கள், அவர் உங்களுடைய மனதில் எவ்வளவு ஆழமாக அடையாளமாகியிருக்கிறார் என்று!

எங்கள் நாடாளுமன்றத்தின் பெண் சிங்கம், அன்பிற்கினிய அருமை அக்கா கனிமொழி அவர்களே!

'பெண்களுக்குச் சொத்தில் சமபங்கு கொடுத்தவர்' என்று வரலாறு போற்றுகின்ற முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் அன்பு மகள் கனிமொழி அவர்கள் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்று சிறப்பித்துக் கொண்டிருக்கிறார்.

சிறந்த பேச்சாளர்களாக
கழகத்திற்கு கிடைத்த மகளிர்!

'இருந்தாலும் மறைந்தாலும் பேர் சொல்ல வேண்டும்;

இவர் போல யார் என்று ஊர் சொல்ல வேண்டும்'

என்ற வார்த்தைகளுக்கு இலக்கணமாக வாழ்ந்த தலைவர் கலைஞரின் அன்பு மகள் கனிமொழி அவர்கள் இந்த மேடையில் வீற்றிருக்கிறார்.

இந்த நிகழ்ச்சியைத் தொடர்வதற்கு முன்னால், எனக்கு முன்னால் பேசிய அன்புச் சகோதரிகள் — நம்முடைய வீர மங்கைகள் சுதா தீனதயாளன், ராஜேஸ்வரி ஸ்ரீதர், அன்புத் தங்கை சரிதா மகேஷ்குமார், மருத்துவர் சாந்தகுமாரி, மருத்துவர் அன்பிற்கினிய பூர்ணிமா, சிறப்பான சொற்பொழிவை ஆற்றி நான்கரை ஆண்டுகளில் இயக்கத்திற்குக் கிடைத்திருக்கின்ற மிகச் சிறந்த பேச்சாளராக உருவெடுத்துள்ள என் ஆருயிர் மகள் மேயர் பிரியா ராஜன் உள்ளிட்ட அனைவரும் மிகச் சிறப்பாக உரையாற்றினார்கள்.

பொதுவாக ஒரு நிகழ்ச்சி என்றால் ஏதாவது ஒரு வகையில் நலத்திட்ட உதவிகள் இருக்கும். ஆனால் இந்த நிகழ்ச்சியைப் பொறுத்தவரையில், இயக்கத்தின் முன்னோடிகளாக, இயக்கத்தின் வேர்களாகத் திகழ்கின்ற 70 வயதைக் கடந்த மகளிரைப் போற்ற வேண்டும் என்று எனக்கு ஆலோசனை வழங்கிய அனைத்து தங்கைகளுக்கும் இந்த நேரத்தில் உங்களுடைய பலத்த கரவொலியோடு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தச் சிங்க நிகர் கூட்டம் இருக்கின்ற வரையில், இந்த இயக்கத்திற்கு இணையென்று எதுவும் இல்லை!

சென்னை கிழக்கு மாவட்டத்தில் ஏற்கனவே வெற்றி பெற்றிருக்கின்ற நமது பெண் மாமன்ற உறுப்பினர்கள் மீண்டும் மாமன்றத்திற்குச் செல்வார்கள்.

'ஆளும் வளரணும்; அறிவும் வளரணும்; அதுதான் வளர்ச்சி!'

என்பதற்கேற்ப, வளர்ச்சியே அடையாத ஒருவர் கூட இந்த மாமன்றத்திற்குச் செல்ல முடியாது என்பதை இந்த மேடையிலிருந்து அறுதியிட்டும் உறுதியிட்டும் சொல்லிக் கொள்கிறேன்.

ஏற்கனவே சென்னை கிழக்கு மாவட்டத்திலிருந்து சென்றிருக்கின்ற நமது பெண் சிப்பாய்களான மாமன்ற உறுப்பினர்கள் மீண்டும் இந்த மாமன்றத்திற்குச் செல்வார்கள் என்ற உறுதியோடு, இந்த முப்பெரும் விழாவில் சபதமேற்றுக் கொள்வோம்!

விழாவைச் சிறப்பித்த
அனைவருக்கும் நன்றி!

எனக்கு முன்னால் பேசிய அருமை நண்பர் அப்துல்லா அவர்களுக்கும், நிகழ்ச்சிக்கு வருகை தந்து சிறப்பித்த முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் அன்பிற்கினிய கே.எஸ். ரவிச்சந்திரன் அவர்களுக்கும், தாயகம் கவி அவர்களுக்கும், ஜோசப் சாமுவேல் அவர்களுக்கும், தமிழன் பிரசன்னா அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நிகழ்ச்சிக்கு முழுமையாகத் தோள் கொடுத்து உதவிய பகுதிக் கழகச் செயலாளர் முரளி அவர்களுக்கும், அன்பிற்கினிய ராஜசேகர் அவர்களுக்கும், இந்த வட்டத்தின் வட்டக் கழகச் செயலாளர் அன்பிற்கினிய சதீஷ் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாங்கள் பெயர் போட்டாலும், போடாவிட்டாலும்; அழைத்தாலும், அழைக்காவிட்டாலும், கழக நிகழ்ச்சி என்றால் வருகை தந்து சிறப்பிக்கின்ற வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் அன்பிற்கினிய கலாநிதி வீராசாமி அவர்களுக்கும், அன்பிற்கினிய சகோதரர் விஜயகுமார் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நல்ல நிகழ்ச்சியில் சிறப்புரையாற்றி, கழகத்தின் முன்னோடிகளைப் போற்ற வந்திருக்கின்றவர் — மனதிற்கு நல்லது என்று பட்டதைத் துணிச்சலுடன் பேசுகின்றவர்!

கழகத் தலைவரின்
குரலாக கனிமொழி!

எந்த இடமாக இருந்தாலும் சரி; அது போர்க்களமாக இருந்தாலும் சரி; அதனால் இழப்பது பதவியாக இருந்தாலும் சரி; மரணத்தின் உச்சியாக இருந்தாலும் கூட, நல்லவற்றுக்காக நடுக்கமின்றிக் குரல் கொடுக்கின்றவர்!

என் அன்பிற்கும் பாசத்திற்கும் உரிய, கழகத்தின் போர்வாள் கனிமொழி அவர்களை சிறப்புரையாற்ற இன்னும் பலத்த கரவொலியோடு—

'வருக! வருக! வருக!'

என்று வரவேற்கிறேன்.

எங்கள் உயிரினும் மேலான அன்புத் தலைவர் தளபதியின் குரலாக இருக்கின்ற அருமை அக்கா கனிமொழி அவர்களை மீண்டும் ஒருமுறை 'வருக! வருக!' என வரவேற்கிறேன்."

இவ்வாறு பி.கே. சேகர்பாபு எம்.எல்.ஏ. பேசினார்.